**தலைப்பு 261 – காலி மாவட்டச் செயலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 261 - காலி மாவட்டச் செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் காலி மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 10 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2023 மே 10 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினை தவிர்த்து, 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான காலி மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கை 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவே அன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் ஒன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய ஆண்டிற்கான அறிக்கையின் பந்தியுடன் தொடர்பு | செயற்படுத்தப்பட்டிருக்காத பரிந்துரை | இவ்வறிக்கையின் பந்தியுடன் தொடர்பு |
|---|---|---|
| 1.6.1 (ஆ)(ii) | பிரதேச செயலகத்திற்கு சொந்தமான அனைத்து சொத்துக்களையும் பெறுமதி மதிப்பீடு செய்து பெறுமதியினை கணக்கீடு செய்ய வேண்டும். | 1.6.1 (அ)(iii) |
| 1.6.1 (ஆ)(iv) | பிரதேச செயலாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 1.6.1 (அ)(iv) |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது வேறு செலவுத் தலைப்புகளில் இருந்து மாவட்ட செயலகத்திற்கு கிடைத்திருந்த ரூபா 411,264 தொகை பெறுமதியான மோட்டார் வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை சட்டரீதியாக உரித்தாக்காமால் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பொது நிருவாகம், உள்நாட்டு அலுவல்கள் மற்றும் நீதி அமைச்சின் செலவுத் தலைப்பின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மாவட்ட செயலகத்தின் சொத்துக்களின் கீழ் பொருட் பதிவேட்டில் பதிவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | சட்ட ரீதியாக ஒப்படைக்கப்பட்ட சொத்துக்கள் மாத்திரம் மாவட்ட செயலகத்தின் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ii) | ஸிகாஸ் BOS பொழிப்பு அறிக்கையின் படி 03 தொகுதி சொத்துக்களின் பெறுமதியின் கூட்டுத்தொகை ரூபா 207,863,520 தொகையாக காணப்பட்டதுடன், பிரதேச செயலகங்களில் இருந்து பெற்றிருந்த சொத்துக்களின் பெறுமதி தொடர்பான தகவல்களின் படி ரூபா 32,366,561 தொகை பெறுமதியாக காணப்பட்டமையால் ரூபா 175,496,959 இற்காக வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | பிரதேச செயலகங்களினால் தகவல் சமர்ப்பிக்கும் போது ஏற்பட்டிருந்த தவறுகளின் காரணமாக இந்த வித்தியாசங்கள் ஏற்பட நேரிட்டிருந்தது. | ஸிகாஸ் பொழிப்பறிக்கை மற்றும் பிரதேச செயலகங்களின் சொத்துக்களின் பெறுமதிகள் சமமாகக் காணப்பட வேண்டும். |
| (iii) | கடவத்சதர பிரதேச செயலகத்திற்கு சொந்தமான பியதிகம மாணவ படையணிக் கட்டிடம் மற்றும் மாதம்பாகம புதிய பிரதேச செயலகக் கட்டிடத்தை பெறுமதி மதிப்பீடு செய்து பெறுமதியினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வறிக்கை கிடைக்கப் பெறாமையால் பெறுமதியினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்யும் அலுவல்களை விரைவாக பூர்த்தி செய்து பெறுமதியினை கணக்கீடு செய்ய வேண்டும். |
| (iv) | பிரதேச செயலகங்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த மூடப்பட்டிருந்த 78 பாடசாலைகளின் 107 ஏக்கர் காணி மற்றும் 125 கட்டிடங்கள் மீளாய்வாண்டு இறுதி வரை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | தொடர் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடிய 31 பாடசாலைகளின் உரித்தாக்கல் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்யும் அலுவல்களை விரைவாக பூர்த்தி செய்து பெறுமதியினை கணக்கீடு செய்ய வேண்டும். |

**(ஆ) கட்டுநிதி மீதி**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கரந்தெனிய பிரதேச செயலகத்தில் 2006 ஆண்டின் போது ஏற்பட்டிருந்த காசோலை மோசடி ஒன்றின் காரணமாக முன்கொண்டு | தவணை அடிப்படையில் குறிப்பிட்ட நபரிடம் அறவீடு செய்யப்படுகின்றது. | நிலுவைத் தொகையை விரைவாக அறவீடு செய்து தீர்க்கப்படாத மீதிகளைத் தீர்க்க வேண்டும். |

வரப்பட்டிருந்த தீர்க்கப்படாத மீதி 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 115,536 தொகையாக காணப்பட்டது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 26 அமைச்சுக்களில் இருந்து, 16 திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் இருந்து மீளாய்வாண்டு இறுதியளவில் கூட்டுத்தொகை ரூபா 3,347,788,862 இற்கான ஏற்பாடுகள் கிடைக்கப்பட்டிருந்ததுடன், ரூபா 3,184,403,320 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி ரூபா 163,385,542 தொகைக்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. | உத்தியோகத்தர்களின் வெளிக்கள கொடுப்பனவுகள் பல்வேறு காரணங்களினால் குறைவடைதல் முக்கியமாக தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மூலம் கிடைக்கும் ஏற்பாடுகளை உச்ச அளவில் பயன்படுத்த வேண்டும். |

### 2.2 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுப்பனவுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| யக்களமுல்ல பிரதேச செயலகத்தினைச் சேர்ந்த சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் 2019 திசெம்பர் 10 திகதி முதல் தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர் ஒருவர் என கடமையாற்றியிருந்தார். தாபனக் கோவையின் அத்தியாயம் XXX பிரிவு 1.3 இன் படி செயலாளரின் அங்கீகாரத்தை முன்கூட்டியே | 2020 ஒக்தோபர் 21 திகதி முதல் 2021 ஜுலை மாதம் வரை சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் செலுத்தப்பட்ட சம்பளத்தை ஒரு மாதத்திற்குள் செலுத்தும் படி குறிப்பிட்ட சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு அறிவித்து 2023 மார்ச் 14 திகதி கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. | முறைசாரா விதமாக மற்றும் முறையான அங்கீகாரம் இன்றி மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை மீண்டும் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| பெற்றுக்கொள்ளாமல் 2019 திசெம்பர் முதல் 2021 ஏப்ரல் மாதம் வரை சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் என கூட்டுத்தொகை ரூபா 612,692 தொகையும், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் என அக் காலப் பகுதிக்காக ரூபா 1,165,625 தொகையும், சம்பளம் மற்றும் படியாக முறைசாரா விதமாக பெற்றிருந்தார். | | |

**(ஆ) கொடுப்பனவுக்காக அங்கீகரிக்கப்பட்டிருக்காத உறுதிச் சீட்டுக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| எல்பிட்டிய பிரதேச செயலகத்தினால் செயற்படுத்தப்பட்டிருந்த கிராமத்துடன் கலந்துரையாடல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வாழ்வாதார அபிவிருத்திக்காக ஒரு மாத வயதினை உடைய 1822 நாட்டுக் கோழிக் குஞ்சுகள் வழங்குவதற்காக ரூபா 865,450 தொகை கொடுப்பனவு செய்வதற்காக 2022 ஆகஸ்ட் 30 திகதிய காசோலை தயார் செய்யப்பட்டிருந்தது. 2023 மார்ச் 23 திகதியாகிய கணக்காய்வுப் பரிசோதனை திகதி வரை கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டிருக்காததுடன், சுமார் 07 மாத காலம் காசோலை கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. நிதிப் பிரமாணம் 137(5) பிரகாரம் வழங்கள் தொடர்பான சந்தர்ப்பங்களில் அவற்றை பரிசோதனை செய்து சரியாக பெற்றுக்கொண்டிருப்பதற்காக உறுதிப்படுத்தப்படாமல் வழங்கல்களுக்கான கொடுப்பனவுகள் அங்கீகரிக்கப்படக்கூடாது எனினும், அதற்கு முரணாக செயற்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் ஒரு பகுதி பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், தற்போதைய நட்டின் நிலைமைக்கு இந்தச் செயற்திட்டம் மிக முக்கியமாகக் காணப்பட்டமையால் எதிர்காலத்தில் இந்தக் கோழிக் குஞ்சுகளை வழங்குவதற்கு வழங்குனர் இணங்கியுள்ளார். அதன் காரணமாக இந்த தொகைக்கு காசோலை எழுதப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளது. | உண்மையாகவே பண்டங்கள் கிடைக்கப்பட்டதை உறுதிப்படுத்திய பின்னர் கொடுப்பனவு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.3 வைப்பு மீதிகள்

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகம் மற்றும் 22 பிரதேச செயலங்கள் தொடர்பாக ரூபா 239,462,961 தொகைக்கான காலவதியான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த வைப்புக்களை விடுவித்தல் அல்லது விடுவிக்காவிடின் வருமானத்திற்கு எடுப்பதற்காக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 திகதி சம்லா சோமரத்தின மன்றத்தினால் மாதம்பாகம பிரதேச செயலகம் நிர்மாணிப்பதற்காக வழங்கியிருந்த ரூபா 10,000,000 இற்கான தொகை 2023 மார்ச் 31 திகதி வரை குறிப்பிட்ட நிர்மாண வேலைக்காக பயன்படுத்தப்படாமல் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | மாதம்பாகம பிரதேச செயலகத்தின் நிர்மாண வேலைகள் இதுவரை ஆரம்பிக்கப்படாமையால் அந்தத் தொகை வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. | ஏதேனும் விஷேட கருமம் ஒன்றிற்காக கிடைத்த பணம் குறிப்பிட்ட கருமத்திற்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 22 பிரதேச செயலகங்களின் மூலம் செயற்படுத்தப்பட்டிருந்த கிராமத்துடன் கலந்துரையாடல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிராம அபிவிருத்தி செயற்திட்டம், உள்ளுராட்சி பிரிவு அபிவிருத்தி மற்றும் கிராமிய வாழ்வாதார அபிவிருத்தி செயற்திட்டத்தின் பௌதீக இலக்குகள் முறையே 9,616 தொகை, 3,666 தொகை மற்றும் 3,081 தொகை எனினும் அந்த செயற்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் முறையே 2,160 தொகை, 771 தொகை மற்றும் 448 தொகையாக காணப்பட்டது. அதன்படி, 7,456 கிராமிய | 3/2022 தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் மூலம் அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்துதல் செயற்படுத்துவதை இடைநிறுத்தியிருந்தமையால் எதிர்பார்த்த இலக்கினை நெருங்குவதற்கு முடியாமல் இருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் திட்டமிடப்பட்ட செயற்திட்டங்கள் அவ்வாறே நிறைவேற்றுவதற்கும் அவ்வாறன்றேல் திட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

அபிவிருத்தி செயற்திட்டங்கள், 2,895 உள்ளூராட்சி பிரிவின் அபிவிருத்தி செயற்திட்டங்கள் மற்றும் 2,633 கிராமிய வாழ்வாதார அபிவிருத்தி செயற்திட்டங்களும் நிறைவேற்றப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 3.2 உள்நாட்டு நிதியங்களின் மூலம் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 3,154,877,678 தொகைக்கான 2000 இருக்கைகளை கொண்ட கேட்போர் கூடம் நிர்மாணித்தல் தொடர்பாக 2023 மார்ச் 16 திகதி அளவில் செயற்திட்ட உசாத்துணையாளரினால் பரிந்துரைக்கப்பட்ட மொத்த பில்பத்திரப் பெறுமதி ரூபா 966,723,463 தொகையாக காணப்பட்டது. இது மதிப்பீட்டுப் பெறுமதியில் 30 சதவீதமாக காணப்பட்ட போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2022 மார்ச் 24 திகதி அளவில் அதன் பௌதீக முன்னேற்றம் 15 சதவீதத்தை கொண்ட குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன், அத்திகதியில் உள்ளவாறு ரூபா 195,170,420 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அச் சந்தர்ப்பத்தில் ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கியிருந்த ரூபா 426,330,247 இற்கான முற்பணத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவில் இந்த செயற்திட்டத்தின் அலுவல்கள் நிறுத்தப்பட்டிருந்ததுடன், முற்பண பிணைமுறி போலவே காப்புறுதி அணவலும் காலவதியாக இருந்தமையால் அறவிடப்பட்டிருக்காத முற்பணத் தொகையினை அறவீடு செய்தல் ஆபத்து நிலை காணப்பட்டது. | செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்ததுடன், அதன் கால நீடிப்பு மற்றும் பிணைமுறியின் கால நீடிப்பு உள்நாட்டு விவகார அமைச்சினால் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | செலுத்தப்பட்டிருந்த முற்பணத் தொகையை அறவீடு செய்வதற்கும் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நிர்மான வேலைகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கையொன்று எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1 இன் பிரகாரம் ரூபா 500,000 தொகையினை மிகைக்கும் பண்டங்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யும் போது முறையான உடன்படிக்கை ஒன்றிற்கு அனுக வேண்டியிருந்த போதிலும், இமதுவ பிரதேச செயலகத்தினால் கூட்டுத்தொகை ரூபா 19,227,845 தொகைக்கான பண்டங்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யும் 11 சந்தர்ப்பங்களில் உடன்படிக்கைகளுக்கு அனுகியிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இக் குறைபாடுகள் சரி செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்திற்குரிய மொத்தப் பெறுமதி ரூபா 1,000,000 தொகைக்கான கப் வண்டியொன்று 2020 மார்ச் 10 திகதி முதல் 2022 ஜுலை 20 திகதி வரை அலுவலகத்தின் கராஜிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2023 மார்ச் 27 திகதி அளவில் படகம்வில சுற்றுலா பங்களா வளாகத்திலும் நிறுத்தப்பட்டு துரப்பிடித்த நிலையில் காணப்பட்டது. | மோட்டார் வாகன பரிசோதகரின் பரிந்துரையின் கீழ் எதிர்காலத்தில் திருத்த வேலைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | பயன்படுத்தப்படாத சொத்துக்கள் தொடர்பாக பொறுத்தமான நடவடிக்கையொன்று எடுக்க வேண்டும். |

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பத்தேகம பிரதேச செயலகத்தின் தகவல் தொழில்நுட்ப நிலையம் நிர்மாணிப்பதற்காக அரசிற்கு காணியொன்று உரித்தாக்குவதற்காக 38(அ) துணை ஏற்பாட்டுக் கட்டளை 2001 ஜுலை 20 திகதி வழங்கியிருந்த | இந்த வட்டித் தொகையை செலுத்துவதற்காக இதுவரை ஏற்பாடுகள் ஒதுக்கப்படவில்லை. | தாமத்தின் காரணமாக செலுத்த நேரிடுகின்ற பயனற்ற செலவுகளை தவிர்ந்து கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

போதிலும், 2020 நவம்பர் 18 திகதியே நட்டஈட்டுத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக ரூபா 10,790,740 இற்கான வட்டித் தொகையொன்று செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது.

**3.6 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பலப்பிட்டிய பிரதேச செயலகத்துடன் இணைந்த 04 சமூர்த்தி வங்கிச் சங்கங்களின் மூலம் சமூர்த்தி பெறுவோருக்காக வழங்கியிருந்த கடன் தொகையில் 2023 பெப்ரவரி 28 திகதி வரை கடன் பெறுவோர் 197 பேரின் ரூபா 11,287,644 இற்கான தொகையொன்று தாமதமாகிய கடன் எனவும், கடன் பெறுவோர் 174 பேரின் ரூபா 7,602,302 தொகை அறவிட முடியாக் கடன் எனவும், நலன் பெறுவோரினால் பேணப்பட்டுவரும் வைப்புக்களில் 3,026 நபர்களின் ரூபா 552,845 தொகைக்கான வைப்புக்கள் செயற்படா வைப்புக்கள் எனவும் இனங் காணப்பட்டிருந்தது. | தாமதமாகிய கடனை அறவீடு செய்வதற்காக மற்றும் அறவிட முடியாக் கடனை அறவீடு செய்வதற்கும் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடன் தொகைகளை விரைவாக அறவீடு செய்வதற்கான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியதுடன், அறவிட முடியாக் கடன் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பலப்பிட்டிய பிரதேச செயலகத்தினால் பேணப்பட்டு வருகின்ற அரச காணிகளின் தகவல் முகாமைத்துவ முறைமையின் மூலம் நிலைவேற்றிக்கொள்ளக் கூடியதாக இருந்த 12 கருமங்களில் பிரதேச செயலகத்தினால் 02 கருமங்கள் மாத்திரமே நிறைவேற்றப்பட்டிருந்தது. 2017 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த முறைமையின் மூலம் அனைத்து நடவடிக்கைகளையும் செயற் திறனுடன் நிறைவேற்றிக் கொள்வதற்காக உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஏதும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருக்காததுடன், வழங்கியுள்ள ஒரேயொரு கணினியில் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக உரிய நிலைக்கு மாற்றுவதற்கு நேரிட்டுள்ளது. | பொருத்தப்பட்டுள்ள முகாமைத்துவ தகவல் முறைமையினை உச்சமட்ட செயற்திறனுடன் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 பொதுமக்களுக்காக சேவை வழங்கல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2004 திசெம்பர் 26 திகதி ஏற்பட்டிருந்த சுனாமி பேரழிவினால் இடம் பெயர்ந்தவர்களுக்கு காணி உறுதிகள் வழங்கும் போது அம்பலங்கொட பிரதேச செயலக அதிகார பிரதேசத்தின் 319 வீடுகள் பெறுவோர்களில் 2022 திசெம்பர் 31 திகதி வரை 105 பேர்களுக்கு மாத்திரமே காணி உறுதிகள் வழங்கப்பட்டிருந்தன. | மீதியான காணி உறுதிகள் வழங்குவதற்காக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | இவ்விடயம் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியளவில் நிறுவனத்தின் பதவியணியில் 604 மிகை உத்தியோகத்தர்களை முறைப் பிரகாரம் அங்கீகரித்துக் கொள்ளாமல் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | இது தொடர்பாக தாபனப் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகைகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |